# உலகத் தமிழர் இயக்கம்
# *World Tamil Movement*
*39 Consentino Drive, Scarborough, ON M1P 3A3, Canada*

நவம்பர் 2, 2007

**<u>பிரிகேடியர் தமிழ்ச்செல்வனுக்கு கனடியத் தமிழர் வீரவணக்கம்</u>**
**<u>விடுதலையை விரைவுபடுத்த உறுதிபூண்பு</u>**

இனவெறிகொண்ட சிறீலங்கா ஆட்சியாளர்கள் கோழைத்தனமாக ஒரு சமாதானப் பேச்சுவார்த்தையாளர், பிரிகேடியர் சு.ப. தமிழ்ச்செல்வனையும் அவருடன் ஐந்து போராளி உறவுகளையும் கோரமாக படுகொலை செய்தனராம் என்ற செய்தி கனடியத் தமிழரை அதிர்ச்சியிலும், ஆறாத சோகத்திலும் ஆழ்த்தியுள்ளது.

சமாதானக் கதவுகளை மூடியுள்ள சிறீலங்கா ஆட்சியாளர்கள், சமாதானச் செயற்பாட்டாளர்களையும் படுகொலை செய்து அதனைக் கொண்டாடுவது சிறீலங்கா தேசத்தில் மட்டும் அரங்கேறும் விநோதம்.

சமாதானம் பேசியவாறே தமிழர் தரப்பு அரசியல் செயற்பாட்டாளர்கள் பலரை முன்னர் படுகொலை செய்த சிங்கள தேசம் இன்று அதன் உச்சமாக தமிழீழ அரசியல்துறைப் பொறுப்பாளர் பிரிகேடியர் சு.ப. தமிழ்ச்செல்வன் அவர்களை படுகொலை செய்துள்ளது. 1995 இல் சந்திரிகா அரசுடன் நடைபெற்ற பேச்சுவார்த்தை முதல், படுகொலை செய்யப்படும் வரை அயராது தமிழர் தரப்பு சமாதான முன்னெடுப்புக்களின் முதன்மை செயற்பாட்டாளராக செயற்பட்டவர் பிரிகேடியர் தமிழ்ச்செல்வன் அவர்கள்.

சர்வதேச சமூகத்தின் சமாதான அழைப்புகளை தொடர்ந்து உதாசீனம் செய்தவாறே ஈழத்தமிழர் வாழ்வினில் தொடர்ந்தும் அழிவையும் அவலத்தையுமே திணித்துவரும் சிங்கள தேசத்தின் இனவெறி ஆட்சியாளர்கள், மனிதகுலம் வெட்கித் தலைகுனியும் வகையில் தொடர்ந்தும் மனிதவெறியாட்டம் ஆடத்துணிந்து நிற்கும் இந்நிலையில், சிறீலங்கா தேசத்தை உடன் தனிமைப்படுத்துமாறு சர்வதேசத்தை குறிப்பாக எமது கனடிய தேசத்தை வேண்டும் அதேவேளை, எமது தாயக உறவுகளைக் காக்கவும், அவர்களின் உரிமைகளை உறுதிப்படுத்தவும், தமிழர் தாயக விடுதலையே தீர்வு என்பதை முழுமையாக ஏற்று, அதற்காக ஒற்றுமையாகவும், உறுதியுடன் விரைந்து செயற்பட கனடியத்தமிழர் உறுதி பூணுகின்றனர்.

தமிழரின் தாகம் தமிழீழத் தாயகம்

உலகத் தமிழர் இயக்கம்
கனடா

Phone No: (416)335 0622 Fax: (416)335 0636